**அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டம் - 2018**

---

அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆம் திகதிய 2624 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சாகவிருந்த தற்போதைய நிதி அமைச்சு செயற்திட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்குப் பொறுப்பாக உள்ளது. இலங்கையின் அரச நிதி முகாமைத்துவ முறைமையில் கடன் பெறுவோரின் அரசிறை இடைவெளி மற்றும் வினைத்திறனை உயர்த்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,344.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.8 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,034.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30.8 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதி ரூபா 10.00 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2010 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2013 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 ஒக்தோபர் 31 வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றுக்களினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் தாபிப்பு மற்றும் இயலளவு அபிவிருத்தி ஆகிய இரண்டு மூலக்கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| மூலக்கூறு | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| ஒருங்கிணைக் கப்பட்ட திறைசேரி முகாமைத்து வ தகவல் முறைமை | ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் வடிவமைப்பு, தாபிப்பு மற்றும் தொழிற்பாடுகளுக்கான ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகளினை 2016 சனவரி 13 அளவில் பூர்த்தயாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 வரையிலும் பொது திறைசேரியுடன் அரசாங்க செலவழிப்பு முகவர்களின் தகவலினை பகிர்ந்து கொள்வதற்கு தகவல் முறைமை தொழிற்பட்டிருக்கவில்லை. | வேலைகளினை ப் பூர்த்தியாக்கு வதற்கு இலங்கை அரசாங்கத்திட மிருந்து மேலதிக நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். | நிதி அமைச்சினால் முறைமைக்கான விரிவான தனிப்பட்ட வேண்டுகள், அமைச்சுக்கள் மற்றும் திணைக் களங்களினால் புதிய முறைமைக்கான தாமதமான இணைவாக்கம் மற்றும் ஒப்பந்தக் காரர்களினால் முறைமையினை அமுல்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட தாமதங்கள் போன்ற காரணங்களால் தாமதம் ஏற்பட்டிருந்தது. | முறைமையில் காணப்படும் பிழைகளினைக் கண்டறிவதற்கு மற்றும் வினைத்திறனான முறைமையொன்றில் முறைமையை அமுல்படுத்தத் தேவையானதாகக் காணப்படும் உத்தியோகத்தர் களுக்கான பயிற்சிகளினை அளிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| ரூபா 186.53 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 1,000 தனியார் கணனிகள் அரசாங்க செலவழிப்பு முகவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தல், தவறான பாவனை மற்றும் சேதங்களுக்கான சாத்தியம் காணப்படுகின்றது. | எவ்வித கருத்துரைகளும் பெறப்படவில்லை. | செயற்திட்டத்தினால கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். மேலும், நட்டங்களினை இழிவாக்கக்கூடியவாறு உத்தரவாத காலப்பகுதி மீளமைக்கப்படல் வேண்டும். |